காந்த்தி மூன்றாம் வகுப்பு சிறுமி. இனிப்பு என்றால் அவளுக்கு மிகவும் விருப்பம். நாள்தோறும் சாக்லேட் மற்றும் இதர இனிப்புப் பண்டங்களை சாப்பிடுவாள். இவள் ஒரு சோம்பேரியும் கூட. சரியாக பற்களைத் துலக்குவதில்லை. இனிப்பு தின்ற பிறகு வாயைக் கழுவுவதில்லை கிரமமாக பற்களின் இடையில் உணவுத்துணுக்குகள் சிக்கிக்கொண்டு அழுகுத் தொடங்கிற்று. வாயிலிருந்து துர் வாசனை வருவதற்கு ஆரம்பமாயிற்று. ஈறுகளில் ரத்தம், சீழ் காணப்பட்டது. அவளுடைய தந்தை அவளை பல் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். பல் மருத்துவர் காந்த்தியின் பற்களை பரிசோதித்தார். பிறகு காந்த்தியிடம் கூறினார் காந்த்தி நீ நாள் தோறும் உணவுக்குப் பிறகு நன்கு பல்துலக்கவில்லை. பற்களுக்கு இடையில் உணவுப் பொருட்கள் சேர்ந்துள்ளன. இனிப்புகள் தின்றவுடன் உடனடியாக வாயைக் கொப்பளிக்கவில்லை. இதனால் உன்னுடைய மூன்று பற்கள் சொத்தையாகிவிட்டன. வாயிலிருந்து துர்நாற்றம் வருகிறது. உன்னுடைய இரண்டுபற்களைப் பிடுங்கியே ஆகவேண்டும். மற்றொரு பல்லுக்கு சரியான சிகிச்சை அளிக்க வேண்டும் என்றார்.

காந்த்திக்கு என்ன செய்திருந்தால், அவளுடைய இரண்டு பற்களை காப்பாற்றி இருக்கலாம் ?

______________________________

______________________________

______________________________

- பற்கள் முகத்தின் அழகை அதிகரிக்கிறது.
- துல்லியமாக உச்சரிக்க பற்கள் உதவுகின்றன.

©KTBS Not to be republished

**செயல்பாடு :** கீழ்க்காணும் செயல்களை கவனி. சரியானவைகளுக்கு (✓) அடையாளமிடு, தவறானவைகளுக்கு (✗) அடையாளமிடு.

















©KTBS Not to be republished

### படித்து அறிக

- அவ்வப்பொழுது பச்சை கேரட், கரும்பு, கொப்பரை முதலிய கெட்டியான பண்டங்களை மென்று தின்க பற்கள் மற்றும் ஈறுகளுக்கு பயிற்சியாகி, பற்கள் ஆரோக்கியமாக இருக்கும். பால் குடிப்பதாலும் பற்கள் உறுதியாக இருக்கும்.
- பற்களில் எவ்விதமான தொந்தரவுகள் இருந்தாலும் பல் மருத்துவரிடம் சென்று காண்பி.
- உன் ஊரில் பல் மருத்துவர் இருந்தால், அவர்முலம் பற்களின் தூய்மையைப் பற்றிய செய்திகளை தெரிந்துகொள்.

***செயல்பாடு :*** நண்பர்களுடன் கூடி பற்களின் தூய்மையைப் பற்றி ஒரு பட்டியல் தயாரித்து உன் வகுப்பறையில் மாட்டி வை.

உன் வகுப்பிலுள்ள 10 நண்பர்களின் பல் தூய்மையை ஒரு வாரம் நாள்தோறும் கவனி. யாருடைய பற்கள் தூய்மையாக இல்லையோ அவருக்கு பல் தூய்மைப் பற்றிய அவசியத்தை அறிந்து கூறு.

### பாடி மகிழ்



பல்லே பல்லே வெட்டுப்பல்லே
பழம், கறிகாய்களை கடிக்க வல்ல



கூர்மையான கோரைப் பல்லே
கரும்பை கடித்துக் கிழிப்பாய்



அவற்றின் பின் தவடைப்பல்லே
உணவை அரைக்கும் உரல்கல்லே

உங்களனைவரின் உதவி அறிவேன்
நீங்களில்லாமல் உணவை நான் வேண்டேன்.

©KTBS Not to be republished

## பாடம் - 12

# அபாயம் - விபத்து

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- வீட்டிலும், வெளியிலும் விபத்துகள் நேரும் சூழ்நிலைகளைக் குறிப்பிடுவீர்கள்.

இங்குள்ள படங்களை கவனியுங்கள். ஒவ்வொரு படத்திலும் நேர்ந்ததென்ன ? ஏன் இப்படியானது ? சிந்திக்க.









© KTBS Not to be republished













© TBS Not to be republished





இவையெல்லாம் விபத்துகள் நிகழும் சூழ்நிலைகளாகும். சில வீட்டிற்குள் நிகழ்கின்றன. மேலும் சில வீட்டிற்கு வெளியே நிகழ்கின்றன. இவை அபாயம் விளைவிக்கக்கூடியவை.

***செயல்பாடு :***

- நீயோ அல்லது உன்னுடைய நண்பர்களோ இப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சந்தித்திருக்கிறீர்களா ? உன் அனுபவங்களை உன் தோழர்களுடன் பகிர்ந்துக் கொள்க.
- பட்டாசுகளால் உண்டான விபத்துகளைப் பற்றிய விபரங்களை தினப் பத்திரிக்கையிலிருந்து சேகரித்து பள்ளியின் விபரப் பலகையில் இடுக.

***படித்து அறிக :***

- வேகமாகச் செல்லும் வாகனங்களில் ஏறாதே.
- வரிசையாக நின்று பஸ்ஸில் ஏறு.
- பயணம் செய்யும்போது வாகன ஜன்னலுக்கு வெளியே கையையோ அல்லது தலையையோ விடாதே.
- வீதியில் விளையாடாதே.
- குளம், ஏரி போன்றவைகளின் அருகே செல்லும் பொழுது பெரியவர்களுடன் இரு.

மேலுள்ள பட்டியலுடன், உனது அல்லது உனது நண்பர்களுடைய அனுபவங்களினால் நீ அறிந்த எச்சரிக்கை முறைகளைச் சேர்.

**எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.**

©KTBS Not to be republished

**செயல்பாடு :** கீழ்காணும் நிகழ்வுகளில் சரியானவற்றை (✓) செய்க, தவறானவற்றை (✗) செய்க. இந்நிகழ்வுகளைப் பற்றி உன் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

















©KTBS
Not to be republished

பாடி மகிழ்

ஷாலினி, ஊஞ்சல் ஆடுகிறாள்
வைஷாலி ஊஞ்சலை தள்ளுகிறாள்
வேகமாகத் தள்ளியதால்
ஷாலினி கீழே தொப்பென்று விழுந்தாள்.

ஏறி இறங்கும் குரங்காட்டம்
விளையாடி மகிழும் குதிப்பாட்டம்
சருங்கி இறங்கும் இந்தாட்டம்
தலை சுற்றி விழச் செய்யும் அபாய ஆட்டம்.

காலில் அதிக அடி விழுந்தது
நடக்க முடியாத அளவு துன்பம் வந்தது
ஊனமுற்ற காலிற்கு கட்டு விழுந்தது
எச்சரிக்கையின் அவசியமும் புரியவைத்தது

கொளுத்தினர் நண்பர்கள் பட்டாசை
பேசிக்கொண்டே நண்பர்கள் பட்டாசை
டப்பாவால் மூடினர் பட்டாசை,
சிதறவைத்தனர் லக்ஷ்மி பட்டாசை.



டம் டம் ஸை ஸை பட்டாசு
சுற்றி சுற்றி நுழைந்தது பட்டாசு
தப்பித் தப்பி ஓடச் செய்த பட்டாசு
ஆயினும் கண்ணில் காயம் செய்தது பட்டாசு.

சுட்டுவிட்டதே பட்டாசு கண்ணை
வைத்தியர் போட்டார் மருந்தை
பார்க்கவும், ஆடவும்முடியாமல் செய்தது
வேண்டாம் என்றேன் பட்டாசை.

©KTBS Not to be republished

## பாடம் - 13

# வசதிகள் நமக்காக

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- பொது வசதிகளின் அவசியத்தை குறிப்பிடுவீர்கள் மற்றுவம் பாதுகாப்பீர்கள்.

அன்று பள்ளி மாணவர்கள் வெவ்வேறு இடங்களைச் சுற்றிப் பார்க்கும் நிகழ்ச்சி. மாணவர்ளுக்கெல்லாம் மகிழ்ச்சி. சொன்ன நேரத்திற்கு முன்பே எல்லா மாணவர்களும் பள்ளியில் சேர்ந்தனர். சரியான நேரத்தில் பஸ் வந்தது. மாணவர்களெல்லாம் வரிசையாக நின்று பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தனர். பஸ் புறப்பட்டது. முதலில் எல்லோரும் நூலகத்திற்கு சென்றனர்.




மாணவர்கள் பலகையில் எழுதப்பட்டிருந்ததை கவனமாகப் படித்தார்கள். சத்தம் போடாமல் நூலகத்தைச் சுற்றிப் பார்த்தனர். தமக்கு பிடித்த புத்தகங்களை சிறிது நேரம் படித்தனர். பிறகு புத்தகங்களை அவற்றின் இடங்களிலேயே வைத்துவிட்டு வெளியே வந்தனர். பஸ்ஸில் உட்காந்தனர்.

படத்திலுள்ள நூலகத்தின் குறிப்பு பலகைகளை படி. ஏன் இதை எழுதியுள்ளனர் ?

©KTBS Not to be republished

நீ உன் வட்டாரத்திலுள்ள நூலகத்தைப் பார்த்துள்ளாயா ?
அங்கு நீ எந்தெந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவாய் ? எழுது.

**நூலகத்திற்கு செல்லும் பழக்கத்தை வளர்த்துக்கொள்.**

பஸ், பேருந்து நிலையத்தில் நின்றது. மாணவர்கள் எல்லோரும் இறங்கினர். பேருந்து நிலையத்தை சுற்றிப் பார்த்தனர்.




மாணவர்கள் பேருந்து நிலையத்தை சுத்தப்படுத்த எவ்வாறு உதவினர் ?

Not to be republished

உன் ஊரின் பேருந்து நிலையம் எவ்வாறுள்ளது ?

பிறகு எல்லா மாணவர்களும் பஸ்ஸில் ஏறி மருத்துவமனைக்குச் சென்றனர்.




மாணவர்கள் மருத்துவமனையில் நடைபெறுகின்ற செயல்களை கவனித்தார்கள். எவ்வளவு சுத்தமாக உள்ளது, என்று நினைத்தபடியே பஸ்ஸில் ஏறினார்.

உன் ஊரின்மருத்துவமனையை சென்று பார்க்க. அது சுத்தமாக உள்ளதா? கவனிக்க. அதைப் பற்றிய சில விவரங்களை இங்கு எழுதுக.

©KTBS Not to be republished

பூங்காவிற்கு அருகில் பஸ் நின்றது. எல்லா மாணவர்களுக்கும் மகிழ்ச்சி.

**இது உங்கள் ஊரின் பூங்கா. சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.**




மாலைவரை விளையாடி சோர்வடைந்த மாணவர்கள் பஸ் ஏறி பள்ளிக்குத் திரும்பினர். நீ பார்த்த பூங்கா எப்படி இருந்தது ? இருவரிகளில் எழுது.

________________________________________________

________________________________________________

மறுநாள் ஆசிரியர், மாணவர்கள் தாம் கண்ட இடங்களைப் பற்றி சில கேள்விகள் கேட்டார். அவர்களுடன் நீயும் சென்றாயல்லவா ? இக்கேள்விகளுக்கு விடையளி.

1. நீ பார்த்த இடங்களின் பெயர்களை எழுது.

________________________________________________

________________________________________________

© KTBS Not to be republished

2. உனக்கு பிடித்த இடம் எது ? ஏன் ?

3. நூலகம், மருத்துவமனை, பேருந்து நிலையம், பூங்கா இவை அனைத்தும் பொது வசதிகள் ஆகும். இவற்றை யார் பயன்படுத்துகிறார்கள்?

4. நாம் எல்லோரும் பயன்படுத்தும் வசதிகள் பொது வசதிகளாகும். பொது வசதிகள் நமக்கு ஏன் அவசியம் ?

5. பொது வசதிகளை யார் பாதுகாக்கிறார்கள் ? அறிந்தெழுதுக.

இப்படங்களில் காணும் பொது வசதிகளின் பெயர்களை எழுதி ஒவ்வொரு வசதியின் அவசியத்தைப் பற்றியும் அதன் பக்கத்திலுள்ள இடத்தில் எழுது.






©KTBS Not to be republished








அஞ்சல் நிலையம்
தபால் வில்லைகள் கடிதங்கள்













©KTBS Not to be republished

கீழ்காணும் படங்களை கவனி. இப்படிப்பட்ட சூழ் நிலைகளில் நீ என்ன செய்வாய் ? எழுது.












©KTBS Not to be republished

உன் ஊரிலுள்ள பொது வசதிகளைப் பட்டியலிடு.

________________________________________

________________________________________

பள்ளி ஒரு பொது வசதியாகும். ஏன் ? இங்கு எழுதுக.

________________________________________

________________________________________

உன் பள்ளியை நீயும் உன் நண்பர்களும் எப்படி சுத்தமாக வைத்துக்கொள்வீர்கள் ?

________________________________________

________________________________________

***செயல்பாடு :*** கீழ்க்காணும் எழுத்துக்கள் உள்ள கட்டங்களில் பொது வசதிகளின் பெயர்கள் மறைந்துள்ளன. அவற்றை வட்டமிட்டுக் குறிப்பிடு. உனக்காக ஒன்று செய்யப்பட்டுள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| த | பா | ல் | நி | லை | ய | ம் | க | க |
| கு | பூ | ங் | கா | பொ | சீ | க | டை | ழி |
| ச | ந் | தை | வெ | வீ | நி | ல | சு | வ |
| ல | ம | ரு | த் | து | வ | நூ | மை | றை |
| கா | ர் | ப | ள் | ளி | ம | னை | ம | ர |
| வீ | டு | தெ | ரு | வி | ள | க் | கு | ம் |

• இவற்றில் பொது வசதிகளை தேர்ந்தெடுத்து அவற்றை வட்டமிடுக.

பள்ளி, கடை, வீடு, நூலகம், கார், பஸ், வீதி மரங்கள், வீட்டுவிளக்கு, வீதிவிளக்கு, பூங்கா, வீதி, வீட்டுக்குழாய், தெருக்குழாய், வீட்டுத்தோட்டம், தபால் நிலையம், சந்தை, நியாயவிலை கடை.

©KTBS Not to be republished

# பாடம் - 14

## போக்குவரத்து

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- பயணத்தின் அவசியத்தை குறிப்பிடுவீர்கள்.
- குறைந்த - அதிக தொலைவு மற்றும் நவீன போக்குவரத்து சாதனங்களைப் பற்றி அறிவீர்கள்.
- பேருந்து நிலையத்திலும் இரயில் நிலையத்திலும் வேலை செய்யும் பல வேலையாட்களைப் பற்றி அறிவீர்கள்.

**பாடி - மகிழ்**

நான் சென்றேன் பயணம்
பஸ்ஸில் நண்பர்களின் சகவாசம்
வழியில் கண்டேன் அதிகம்
போக்குவரத்து சாதனங்கள் அநேகம்

நொண்டிச் செல்லும் குதிரைவண்டி
பாரம் நிறைந்த மாட்டுவண்டி
நிதானமாகச் செல்லும் மிதிவண்டி
வேகமாகச் செல்லும் இரயில்வண்டி

விரைந்து ஓடும் பைக்கு அது
நீரில் மிதந்து செல்லும் படகு
ஆகாயத்திலும் போக்குவரத்து சாதனம்
மிக வேகமாகச் செல்லும் விமானம்

மூன்று சக்கர ஆட்டோ ரிக்ஷாக்கள் அதிகம்
நான்கு சக்கர கார்கள் பல லட்சம்
பலவித போக்குவரத்து சாதனங்களைப் பார்
விந்தையூட்டும் போக்குவரத்து சாதனத்தைப் பார்

நான் உபயோகிப்பேன் போக்குவரத்தை நூறுமுறை
பாடுவேன் நான் போக்குவரத்து பாட்டுபலமுறை.





©KTBS Not to be republished

இப்பாட்டில் உள்ள வாகனங்களின் பெயர்களை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

வாகனங்களின் படங்களை சேகரித்து ஒட்டுக.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

©KTBS Not to be republished

நீ பயணம் செய்த வாகனங்களின் பெயர்களை பட்டியலிடுக.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

இவற்றில் வேகமாக மற்றும் நிதானமாகச் செல்லும் வாகனங்கள் யாவை?

| வேகமாகச் செல்லும் வாகனங்கள் | நிதானமாகச் செல்லும் வாகனங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

உங்கள் ஊரிலுள்ள மக்கள் பொருட்களை அனுப்புவதற்கு செய்ய அல்லது கடத்த எவ்வகை வாகனங்களை உபயோகிப்பார்கள் ? இங்கு எழுதுக.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

©KTBS Not to be republished

**செயல்பாடு : விடுப்பட்ட இடங்களை நிரப்பிப் படித்து ஏற்ற படங்கள் கிடைத்தால் ஒட்டு.**

நாம் நம் தேவைகளுக்காக ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல ______ , ______ போன்ற வாகனங்களை பயன்படுத்துகிறோம். பொருட்களை போக்குவரத்து செய்ய ______ ______ மற்றும் ______ போன்ற வாகனங்களைப் பயன்படுத்துகிறோம். வெகு தூர இடங்களுக்குப் பயணம் செய்ய ______ உகந்தது. பாலைவனத்தில் பயணம் செய்ய ______ பயன்படுத்துகிறார்கள். இதை பாலைவனக் கப்பல் என்று அழைப்பார். நதியைக் கடக்க ______ பயன்படுதுவர்.




©KTBS
Not to be republished

உன் ஊரிலுள்ள பேருந்து நிலையத்தில் நீ என்னென்ன பார்த்திருக்கிறாய் எழுது.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**செயல்பாடு :** நீ பார்த்த மற்றும் வரைவதற்கு சுலபமான 2 வாகனங்களை வரைந்து வண்ணம் தீட்டுக.

©KTBS Not to be republished

## இரயில் நிலையம்




- உங்கள் ஊரில் இரயில் நிலையம் உள்ளதா ?
- நீ இரயில் நிலயத்தைப் பார்த்திருக்கிறாயா ?
- நீ இரயிலில் பயணம் செய்துள்ளாயா ?

### செய்து பார்

வத்திப்பெட்டிகள் மற்றும் குளிர் பானங்களின் மூடிகளைப் பயன்படுத்தி பெரியர்வகளின் உதவி பெற்று இரயிலின் மாதிரியைத் தயாரித்து மகிழ்.

### படித்து அறிக

- பேருந்து மற்றும் இரயில் நிலையத்தில் வெவ்வேறு வேலைகளைச் செய்ய பல வேலையாட்கள் அவசியம். நாமெல்லோரும் சுகப்பயணம் மேற்கொள்ள நமக்கு இவர்களுடைய உதவி மிகவும் அவசியம்.

©NIE Not to be republished

- கீழ்காணும் படங்களில் யார் யார் என்னென்ன வேலைகளைச் செய்கிறார்கள் ? விடுப்பட்ட இடங்களில் எழுதுக.



________________



________________



________________



________________



________________

©KTBS Not to be republished

# பாடம் - 15

## கடிதத் தொடர்பு

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- சைகை, நடனம் போன்றவைகளின் மூலம் மொழியைப் பயன்படுத்தாமல் பேசுவீர்கள்.
- கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் முறை மற்றும் தபால் நிலையத்தில் நடைபெறும் செயல்களைப் பற்றி அறிவீர்கள்.



©KTBS Not to be republished

கோடை விடுமுறையில் ஒரு நாள். சஞ்ஜெய்யின் வீட்டில் சில குழந்தைகள் டி.வியில் கிரிகெட் பார்க்க ஒன்று கூடினர். விளையாட்டு விருவிருப்பாக இருந்தது. ராஹுல்டிராவிட் பேட் செய்துக்கொண்டிருந்தார். ஹர்பஜன் சிங் பௌலிங்க் செய்துக் கொண்டிருந்தார். டிராவிட் பேட்டினால் பந்தை அடித்தார். பந்து பவுண்டரியைத் தாண்டிச் சென்றது. விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கைதட்டி மகிழ்ந்தனர். குட்டி சஞ்சய் அம்பையர் செய்துக்கொண்டிருந்த சைகையைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சஞ்சய் : சுனில் அண்ணா, அம்பையர் ஏன் தன் இரண்டு கைகளையும் மேலே தூக்கினார்.

சுனில் : பந்து பவுண்டரியைத் தாண்டி விழுந்ததல்லவா. ஆறு இரன்கள் என்று குறிப்பிட அம்பையர் அச்சைகையைச் செய்தார்.

சஞ்சய் : அவர் அதை கூறலாம் அல்லவா ?

உமா : இவ்வளவு பெரிய மைதானத்தில், ஜனங்கள் செய்யும் கலாட்டாவினால் கேட்காது. எனவே சைகை மூலம் காட்டுவதே சரி. எல்லோருக்கும் புரியும்.

லூசி : நாங்கள் ஒரு ஹோட்டலுக்குச் சென்றிருந்தோம். அங்கும் சப்பாத்தி, சாதம் போன்றவற்றை கொண்டுவருமாறு சைகை செய்தனர். இது பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

சல்மான் : ஆமாம், சில சமயங்களில் மொழி புரியாத போதும், தூரத்தில் இருக்கும் போதும் சைகை மூலம் பேசுவது பயனளிக்கும்.

**செயல்பாடு :**

- நீ சைகை மூலம் உன் நண்பர்களுடன் பேசு.
- சைகை மூலம் கீழ்காண்பவைகளைக் கூற முயற்சி செய்.

அழைப்பது, எழுதுவது, பாடுவது, உண்பது, பொருளை கொண்டு வருமாறு கூறுவது, வேண்டாம் - வேண்டும் என்று குறிப்பிடுவது, மேலே - கீழே, அங்கு - இங்கு காட்டுவது, நீர் குடிப்பது போன்ற. இச்சைகைகளை நீ செய். உன் நண்பர்கள் நீ செய்யும் சைகைகளை விளக்கட்டும்.

- நீ கிரிக்கெட், ஃபுட்பால், போன்ற விளையாட்டுகளை பார்த்திருக்கிறாயா ? அங்கு காட்டப்படும் சைகைகளை உன் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்து. இச்சைகைகள் எதைக் குறிப்பிடுகின்றன. எ.கா. ஒரு கையை உயர்த்தி ஒரு விரலை மேலே காட்டினால் கிரிக்கெட்டில் ‘அவுட்’ என்று பொருள்.

©KTBS Not to be republished

பாடி மகிழ்

மொழி வேண்டாம், ஊர் வேண்டாம்
சைகைகளை அறிந்திடு
தொலைவில் இருந்தாலும், கூச்சல் இருந்தாலும்
சைகைகளை பயன்படுத்திடு

இரமேஷ் : ஆஹா, டிராவிட் .... எவ்வளவு அழகாக சென்சுரி அடித்தார் அல்லவா.

கருணா : எனக்கு டிராவிட் மிகவும் பிடிக்கும்.

சுனில் : எனக்கும் பிடிக்கும். சென்சுரி அடித்ததற்கு அவருக்கு வாழ்த்து கூறி கடிதம் எழுதலாமா ?

எல்லோரும் : நல்ல விஷயம் !

கருணா : நான் எழுதுகிறேன். என்ன எழுதுவது என்று நீங்கள் கூறுங்கள்.

உமா : சரி, உன் கையெழுத்து அழகாக இருக்கும்.

கருணா : யாரிடம் போஸ்ட் கார்டு இருக்கிறது.

ரிடா : எங்கள் வீட்டிலுள்ளது. இப்பொழுதே கொண்டுவருகிறேன். உணவு இடைவெளியின் போது எழுதலாம்.
(உணவிற்கு நேரமானது. கிரிக்கெட் இடைவெளி)

சுனில் : கருணா, எழுது. நான் கூறுகிறேன்.

இடம் :
தேதி :

அன்புள்ள இராஹுல் டிராவிட் அண்ணனுக்கு வணக்கம்

நாங்கள் மூன்றாம் வகுப்பு மாணவர்கள். எங்கள் எல்லோருக்கும் உங்களை பிடிக்கும். நீங்கள் எவ்வளவு அழகாக பேட் செய்கிறீர்கள். சென்சுரி அடித்ததற்கு உங்களுக்கு வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,

மூன்றாம் வகுப்பு மாணவர்கள்

________________

________________

________________

©KTBS Not to be republished

சஞ்சய் : டிராவிடின் முகவரி தெரியுமா ?

சல்மான் : அப்பாவிடமுள்ளது. இப்பொழுது கொண்டு வருகிறேன்.

கருணா : விலாசம் (முகவரி) எழுதட்டுமா ?




உமா : உன் விலாசம் எழுது.

ரிடா : சரி, கடிதம் எழுதி முடித்துவிட்டோம். இதை டிராவிட் வீட்டிற்கு அனுப்புவது எப்படி ?

சுனில் : தபால் பெட்டியில் போடலாம்.

கிரண் : ஐயோ! இது டிராவிட்டிற்கு எப்படி போய் சேரும்.

சல்மான் : இங்கேயே தபால் நிலையம் உள்ளது. தபால் பெட்டியும் உள்ளது. கடிதத்தை தபால் பெட்டியில் போடலாம். பிறகு கடிதம் எப்படி போய் டிராவிடைச் சேரும் என்பதை தபால்காரரைக் கேட்கலாம்.

(எல்லோரும் தபால்காரிடம் சென்றனர்)

உமா : கருணா, அந்த கடிதத்தை இங்குள்ள தபால் பெட்டியில் போடு.

கருணா : போட்டு விட்டேன்.

©KTBS Not to be republished

சுனில் : (அட, யாரோ பெட்டியிலுள்ள கடிதங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.) நீங்கள் ஏன் கடிதங்களையெல்லாம் எடுத்துக்கொள்கிறீர்கள் ? நாங்கள் டிராவிடிற்கு கடிதம் எழுதியிருக்கிறோம். நீங்கள் எடுத்துக்கொண்டால் டிராவிடிற்கு கடிதம் போய் சேராது.



தபால்காரர் : யோசிக்காதீர்கள் நான் தான் தபால்காரர். மக்கள், தபால் பெட்டியில் தாங்கள் எழுதிய கடிதங்களைப் போடுவர்கள். நான் தினமும் அவற்றை தபால் நிலையத்திற்கு எடுத்துச் செல்வேன். தபால் நிலையத்தில் நடைபெறும் வேலைகளை வந்து பாருங்கள்.






பாருங்கள். இது நீங்கள் டிராவிடிற்கு எழுதிய கடிதம். இதன் மீது முத்திரையிடுவோம். இவையெல்லாம் பெங்களூருக்குச் சென்று சேரவேண்டியவை. இவற்றை இரயிலில் அனுப்புவோம். பெங்களூரிலுள்ள தபால்காரர் இக்கடிதங்களையெல்லாம் தபால் நிலையத்திற்கு எடுத்துச் செல்வார். அங்கு விலாசங்களுக்கேற்ப கடிதங்களைப் பிரித்து விடுவார். அந்தந்த பகுதிகளுக்குச் சார்ந்த தபால்காரர் அவற்றைப் பெற்று சரியான முகவரி கொண்ட வீட்டிற்குச் சென்று கடிதத்தைக் கொடுப்பார்.

©KTBS Not to be republished

சுனில் : இந்தக் கடிதம் டிராவிடிற்கு எப்பொழுது போய்சேரும் ?

தபால்காரர் : மூன்று நாட்களாகும்.

சஞ்சய் : ஐயோ ! நாளை சேராதா ?

தபால்காரர் : அங்கே பாருங்கள், அதிவிரைவாக தபால் அனுப்ப வசதியுள்ளது. இதுதான் 'ஸ்பீட் போஸ்ட்'. அங்கு கொடுத்தால் இக்கடிதம் விமானம் மூலம் வேகமாக சென்று சேரும். ஆனால் அதற்கு அதிக பணம் கொடுக்க வேண்டும். தபால் நிலையங்களைத் தவிர சில நிறுவனங்களும் அதிவிரைவாக அனுப்பும் தபால் வசதிகளைப் பெற்றுள்ளன. 'கொரியர்' தபாலைப் பற்றி கேட்டிருக்கிறீர்கள் அல்லவா ?

ரீடா : ஓஹோ, முன்தினம் என் பிறந்த நாளிற்கு எனது பாட்டி பணத்தை கூட தபால் மூலமாகத்தான் அனுப்பினார். தபால் அண்ணன் அதை வீட்டில் சேர்த்தார்.

தபால்காரர் : அது மணிஆர்டர். கடிதத்தைப் போலவே பணத்தையும் தபால் மூலம் வேறு ஊர்களுக்கு அனுப்பலாம். அப்படியே புத்தகங்கள் போன்ற மற்ற பொருட்களையும் அனுப்பலாம். இதை பார்சல் என்பர்.

சுனில் : மூன்று நாட்களுக்குள் எங்கள் கடிதம் டிராவிடைச் சேரும் அல்லவா, அண்ணா ?

தபால்காரர் : ஆம் குழந்தைகளே, சந்தேகம் வேண்டாம்.

கருணா : அய்யா ........ இப்பொழுது உணவு இடைவெளி முடிந்திருக்கும். கிரிக்கெட் மாட்ச் பார்க்கலாம், வாருங்கள் போகலாம்.

(குழந்தைகள் எல்லோரும் தபால் நிலையத்திலிருந்து ஓடிச் சென்று டிவி முன்னால் உட்கார்ந்துக்கொண்டனர்.)

நாம் கடிதங்களை ஏன் எழுதுகிறோம் ?

©KTBS Not to be republished

நீ யாருக்காவது கடிதம் எழுதியுள்ளாயா ?

**செயல்பாடு :** உன் நண்பர்களுக்கு / தாத்தா, பாட்டிக்கு / பிடித்த நபருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**செய்து பாருங்கள்**

நீ உன் ஊரிலுள்ள தபால் நிலையத்திற்கு சென்று எழுதிய கடிதத்தை தபால் பெட்டியில் போடு. பிறகு தபால் நிலையத்திற்குள் சென்று அங்கு நடைபெறும் செயல்களைக் கவனி.

நீ சென்று பார்த்த தபால் நிலையத்தைப் பற்றி எழுதுக.

©KTBS Not to be republished

கீழ்காணும் படங்களை கவனி. சரியான வரிசை எண்ணை எழுது. கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டைக் கவனி.







1







©KTBS Not to be republished

**செய்து - பார்**

வெள்ளை காகிதத்தைப் பயன்படுத்தி கடித உறை ஒன்றைத் தயாரிக்க.



நீ தயாரித்த கடித உறைக்குள், அனுப்ப வேண்டியவரின் பெயரையும் விலாசத்தையும் எழுது. நீ எழுதிய கடிதத்தை அதற்குள் வைத்து சரியாக மூடி, பிறகு ஒட்டு. இப்பொழுது அதன் மீது 5.00 ரூ மதிப்புள்ள ஒரு தபால்தலையை ஒட்டி, பிறகு தபால் பெட்டியில் போடு.

தபால் தலை ஒட்டாமல் அனுப்பினால் என்ன ஆகும்? ஆசிரியரிடமிருந்தோ, பெரியவர்களிடமிருந்தோ கேட்டு அறிந்துகொள்.

**செயல்பாடு :** சிறந்த மனிதர்கள், விலங்குகள், தாவரங்களின் படங்களுள்ள தபால்தலைகளை நீ பார்த்திருப்பாய். விதவிதமான தபால்தலைகள் உள்ளன. இப்படிப்பட்ட விசேஷமான தபால்தலைகளை சேகரிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள். சேகரித்த தபால்தலைகளை ஒரு பெரிய காகிதத்தில் ஒட்டி, அதைப் பற்றி இரண்டு வரிகள் எழுது.

©KTBS Not to be republished

## பாடம் - 16

# தீபாவின் தலைமுறை

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- மூன்று தலைமுறையைச் சேர்ந்த குடும்பத்தினரிடையேயுள்ள உறவை அறிவீர்கள் எளிய மற்றும் வம்சாவளிப்படம் ஒன்றை வரைவீர்கள்.
- குடும்பத்தினரிடமுள்ள பாரம்பரிய அம்சங்களில் உள்ள ஒற்றுமைகளைக் குறிப்பிடுவீர்கள்.
- தாய் மற்றும் குழந்தையின் நடுவேயுள்ள உறவை அறிவீர்கள்.

இராஜுவும் தீபாவும் கோடை விடுமுறையில் தம் தாத்தாவின் ஊருக்கு வந்தனர். தீபா, இராஜு, அம்மா மற்றும் தாத்தா பக்கத்து ஊரில் ஓர் பெயர்சூட்டும் விழாவிற்கு சென்றனர். அங்கு பலபேர் சேர்ந்தனர். தீபா தொட்டிலிலுள்ள குட்டி குழந்தையைப் பார்த்தாள்.

தீபா : அம்மா, இந்தக் குழந்தை யாருடையது?

அம்மா : தீபா, அங்கு பார், தொட்டிலிற்கு அருகே நின்றிருக்கும் இராதா மற்றும் இராஜீவின் குழந்தை. நீ சிறியவளாக இருந்தபொழுது உன்னையும் இப்படித்தான் தூக்கிக்கொண்டே இருந்தேன்.



©KTBS Not to be republished

தொட்டிலிலிருந்த குழந்தை அழத்தொடங்கியதும் இராதா குழந்தையை தூக்கிக்கொண்டு பாடினாள்.

கான மயிலாட கருத்த குயிலாட
தோகை மயிலாட. எஞ்செல்வமே
தொட்டிலிலே நீயாட
எஞ்செல்வமே, ஆராரோ, ஆரிராரோ.

பாட்டைக் கேட்டு குழந்தை அழுகையை நிறுத்தியது.

**செயல்பாடு :** இராதா குழந்தையை எப்படி சமாதானப்படுத்தினாள் என்பதை நடித்து காட்டு.

இதுபோன்ற பாடல்கள் உனக்குத் தெரியுமா? பாடிக்காட்டு. பெரியவர்களிடமிருந்தோ அல்லது ஆசிரியரிடமிருந்தோ இது போன்ற சில பாட்டுகளைக் கற்றுக்கொள்.

இப்படங்களை கவனிக்க. தாய் தன் குழந்தையை எப்படி பாதுகாக்கிறார். கூறு.






மேலுள்ள எல்லா சூழ்நிலைகளிலும் தாயானவள் தன் குழந்தைக்கு அன்பு, ஆதரவு, பாதுகாப்பு, மற்றும் உணவு போன்ற தேவைகளை நிறைவேற்றுகிறாள்.

©KTBS
Not to be republished

பெயர்சூட்டும் திருவிழாவை முடித்து திரும்பும்பொழுது தாத்தாவின் நண்பர்களை சந்தித்தனர் இராஜுவைப் பாருங்கள், ''இவன் தன் தாத்தாவைப் போலவே இருக்கிறான், அவனுடைய கண்கள், அகலமான நெற்றி, நீளமான மூக்கு அனைத்தும் தாத்தாவைப் போலவே உள்ளது, என்றனர்.'' அப்பொழுது தீபா, "நான் அம்மாவைப் போலவே இருக்கிறேன் என்று எல்லோரும் கூறுகிறார்கள். பாருங்கள் எனக்கும் சுருட்டு முடி, அம்மாவுக்கும் சுருட்டு முடி", என்றாள்.

- நீ உன் குடும்பத்தில் யாரைப்போல் இருக்கிறாய்? நன்றாக கவனித்து அவர்களின் பெயரை எழுது. அவர்களுக்கும் உனக்கும் என்ன உறவு?

  ______________________ ______________________

- உன் குடும்பத்தினரிடையேயுள்ள ஒற்றுமைகள் சிலவற்றை குறிப்பிடு.

  எ.கா : நானும் என் அப்பாவும் ஒரே நிறம்.




©KTBS
Not to be republished

- கீழே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் படம் உள்ளது. இதில் நீ காணும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பட்டியலிடு.

**படித்து அறிக :**

குழந்தைகள் தங்களுடைய தாத்தா, பாட்டி, தந்தை, தாய் மற்றும் குடும்பத்திலுள்ள மற்றவர்களை ஒப்பிடுவர். பொதுவாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் தலைமுடி, நிறம், கண்கள், காதுகள், மூக்கு, நடக்கும் விதம், சிரிப்பு போன்றவைகளில் ஒற்றுமையைக் காணலாம்.

சந்தைக்கு சென்று திரும்பும் போது தாத்தா அங்கு வந்தார். தாத்தா இராமப்பா அவர்களை தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

தீபா : "தாத்தா உமக்கு எத்தனை குழந்தைகள் ?",

தாத்தா குழந்தைகளுக்கு தன் குடும்பத்தைப் பற்றி கூறினார்.

தாத்தா : தீபா, உன் பாட்டி புட்டம்மா. எங்களுக்கு இரண்டு குழந்தைகள். அவர்களே உன் தந்தை சுப்பண்ணாவும், உன் அத்தை லீலாவும் ஆவர். உன் அப்பாவிற்கு நீங்கள் இருவரும் பிள்ளைகள். இப்படி நான் உன் பாட்டி, உன் அப்பா அம்மா, நீயும் இராஜூவும். எங்களிடமிருந்து ஆரம்பமாகி உங்கள் வரையிலும் மூன்று தலைமுறைகள் ஆயின."

©KTBS Not to be republished

தீபா : தாத்தா, நீர் கூறியது எனக்கு புரியவில்லை

இராஜு : "தீபா, பள்ளியில் எனக்கு தலைமுறையைப் பற்றி கூறியுள்ளனர். இதை ஒரு எளிய வம்சாவளி படம் வரைந்து காட்டலாம். வீட்டிற்கு சென்ற பிறகு நான் உனக்கு எழுதி காட்டுகிறேன், அப்பொழுது உனக்கு புரியும்" என்றான்.

குழந்தைகள் வீட்டிற்கு வந்தனர்.

தீபா : இராஜு, வம்சாவளியைப் பற்றி கூறினாய் அல்லவா, அதை எழுதிக் காட்டு. இதோ பேப்பரும் பென்சிலும்.

இராஜு : சரி, இங்கு பார்.




தீபா : அட, இது ஒரு மரம் போன்றுள்ளது.

இராஜு : இதை வம்சாவளி படம் என்றழைப்பர்.

இது இராஜு குடும்பத்தின் எளிய/சிறிய வம்சாவளிப்படம்.

உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

__________ __________ __________

__________ __________ __________

©KTBS Not to be republished

வீட்டுப் பெரியோர்களிடமிருந்து உன் பாட்டான் பாட்டியைப் பற்றி கேட்டு அறிக. இராஜு எழுதியது போலவே உன் தாத்தா பாட்டிமுதல் உன்வரை உன் குடும்பத்தின் எளிய வம்சாவளி படத்தை வரைக.

***செயல்பாடு :*** *உன் நண்பர்கள் எழுதிய தமது வம்சாவளி படத்தை கவனி என்ன வித்தியாசம் உள்ளது, பார். வகுப்பறையில் உன் நண்பர்களுடன் கலந்துரையாடு.*

தீபா : தாத்தா, தோட்டத்தில் ஒரு பெரிய மரத்தை காட்டினீர் அல்லவா?

தாத்தா : ஆமாம்,அதை நான் சிறியவனாக இருந்த பொழுது நட்டேன். எவ்வளவு பெரியதாக வளர்ந்துள்ளது.

இராஜு : இதன் பக்கத்தில் இன்னொரு மரமும் இருந்தது தாத்தா.

தாத்தா : அது உன் தந்தை சிறியவனாக இருந்த பொழுது நட்டது. அது சற்று சிறிய மரம். நன்றாக வளர்ந்துள்ளது.

இராஜு : தாத்தா, நானும் தீபாவும் இம் மரங்களுக்குப் பக்கத்தில் இன்னொரு மரத்தை நடுவோம்.

தாத்தா : நல்லது இராஜு. அது உங்களைப் போலவே வளரட்டும்.

©KTBS Not to be republished

# பாடம் - 17

# என் பழக்க வழக்கங்கள்

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- நற்பண்புகள் மற்றும் பழக்கவழக்கங்களின் மீது குடும்பம் பயக்கும் விளைவுகளை கவனிப்பீர்கள்.

இப்படங்களை கவனி



இவர்கள் என்ன செய்கிறார்கள்?

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

**படித்து அறி :**

- ஓய்வு நேரத்தில் தமக்கு பிடித்த மற்றும் ஆர்வம் மிகுந்த செயல்களைப் பலர் செய்ய பழகிக்கொள்கிறார்கள். இவையே பழக்க வழக்கங்களாகும்.

  எ.கா : புத்தகங்களையும் பத்திரிக்கைகளையும் படித்தல், தபால் தலைகளை சேகரித்தல், பாட்டு பாடுதல், தோட்டம் அமைத்தல் போன்றவை.

©KTBS
Not to be republished

1. ஓய்வு நேரத்தில் நீ என்ன செய்வாய்? உன் பழக்கவழக்கங்கள் என்ன?

______________________ ______________________

2. உன் குடும்பத்தினரின் பழக்கவழக்கங்களை கவனித்து, கீழே எழுது.

____________________________________________

____________________________________________

3. உன் நண்பர்களின் பழக்கவழக்கங்களை கவனித்து எழுதுக.

______________________ ______________________

______________________ ______________________

4. உன் பழக்க வழக்கங்களிலும், நண்பர்களின் பழக்க வழக்கங்களிலும் ஒற்றுமை உள்ளதா, இல்லையா? பழக்க வழக்கங்களை இந்த அடிப்படையில் பிரித்து கீழ்காணும் இடங்களில் பட்டியலிடு.

| ஒத்த பழக்கவழக்கங்கள் | ஒவ்வாத பழக்கவழக்கங்கள் |
|---|---|
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |

5. நீ ஏன் இப்படிபழக்க வழக்கங்களைத் தேர்ந்தெடுத்தாய்?

கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் உன் விடைக்கு '✓' குறியிடுக.

| | | |
|---|---|---|
| மிகவும் பிடிக்கும் | அனுகூலம் மற்றும் வாய்ப்பு | சந்தோஷம் / பொழுதுபோக்கு |
| குடும்பத்தினரின் பழக்கவழக்கங்களினால் ஏற்பட்ட விளைவு | நண்பர்களின் பழக்கவழக்கங்களினால் ஏற்பட்ட விளைவு. | ஆசிரியர்/ பெரியவர்களின் வழிகாட்டுதல் |

©KTBS Not to be republished

**படித்து அறிக :**



பத்து வயது நிரம்பிய சிறுவனான சலீம் கீழே விழுந்த சிறிய பறவையை 'குருவி' என்று நினைத்தான். பறவையை தன் கைகளில் ஏந்தி தடவிக் கொடுத்தான் அப்பொழுது அதன் மார்பிலுள்ள மஞ்சள் நிறத்தைப் பார்த்தான். அது **குருவி** அல்ல என்பதை தீர்மானித்தான். அது என்ன பறவை என்று அறியும் ஆர்வம் அவனுக்கு உண்டானது. அவருடைய சித்தப்பா அமீருத்தின், அவனை மும்பையிலுள்ள பறவைகள் மற்றும் விலங்குகளைப் பற்றி ஆராய்ந்தறியும் **'நாச்சுரல் ஹிஷ்டரி சொஸைட்டி'** என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு நடைபெறும் செயல்கள் அவனுடைய ஆர்வத்தைப் பெருக்கியது. பறவைகளை கவனிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டான். இது வழக்கமாக மாறியது. இச்சிறுவன் பிற்காலத்தில் பறவை ஆய்வாளராக உருவாகி பறவைகளைப்பற்றி பல ஆராய்ச்சிகளைச் செய்து நூல்களை எழுதினான். இவரே புகழ்பெற்ற, பறவைகள் மீது அன்புகூர்ந்த **சலீம் அலி** என்பவராவார்.



சிறுவன் ஜகதீஷுக்கு தான் பார்க்கும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை முறையை அறிவதில் ஆர்வம் அதிகம். அவரே பல தாவரங்களை வளர்த்தார். இவருடைய பெற்றோர்கள், ஜகதீஷினுடைய இந்த பழக்கத்தை மெச்சினர். முறையாக தாவரங்களை வளர்க்க பழகிக் கொண்டான். செடி கொடிகளும் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன என்பதை உலகத்திற்கு உணர்த்தினான். இந்த சிறுவனே சிறந்த தாவர விஞ்ஞானியான **டாக்டர் ஜகதீஷ் சந்திர போஸ்** ஆவார்.

இவர்கள், தமது பழக்க வழக்கங்களையே பிற்காலத்தில் தொழிலாக மேற்கொண்டு புகழ் பெற்றவர்கள் ஆவர். ஆர்வம், உழைப்பு மற்றும் குடும்பத்தினரின் உதவியும் வழிகாட்டுதலினால்தான் இது சாத்தியமானது.

**செயல்பாடு :** உன் பெரியோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து இதுபோன்ற எடுத்துக்காட்டுகளை கேட்டு அறிக. உனக்குத் தெரிந்த சில கதைகளை வகுப்பில் கூறு.

©KTBS Not to be republished

நீ உன் குடும்பத்தில் யாரைப்போல் ஆக விரும்புகிறாய்? ஏன்?

______________________________________

______________________________________

உனக்கு பிடித்தமான பழக்கவழக்கங்களை இங்கு எழுதுக.

______________________________________

______________________________________

உனக்கு பிடித்த பழக்க வழக்கங்களை தொடர்ந்து செய்ய குடும்பத்தினர், பெரியவர் மற்றும் ஆசிரியரிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள். இதனுடன் நல்ல பழக்க வழக்கங்களை பழகிக்கொள்.

கொடுக்கப்பட்டுள்ள படங்களை கவனித்து, இவற்றில் நீ எதைச் செய்வாய்? அதற்கு (✓) குறியிடுக. ஏன் செய்வாய் என்று கூறு.









©KTBS
Not to be republished

















©KTBS
Not to be republished

- நீ செய்த ஏதேனும் ஐந்து நற்செயல்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுது. இது ஏன் நல்லது என்பதை கூறு.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

**படித்து அறிக :**

**என்னை அணைத்துக்கொள்.**

நம் மாநிலத்தின் ஷிர்சி தாலூக்காவில், சால்கணி என்பது ஒரு கிராமமாகும். இக்கிராமத்தைச் சுற்றிலும் ஒரு பெரிய காடு உள்ளது. ஒரு நாள் காட்டிலுள்ள மரங்களை வெட்ட பட்டணத் திலிருந்து சில ஆட்கள் வந்தனர். தகவல் அறிந்த கிராமத்தினர் காட்டை நோக்கி ஓடினர். அந்த காட்டின் ஒவ்வொரு மரத்தையும் ஒவ்வொருவர் அணைத்துக்கொண்டு நின்றனர். மரங்களை வெட்ட வந்தவர்கள் இதைப் பார்த்து வியப்புற்றனர். மரம் வெட்ட இயலாமல் திரும்பிச் சென்றனர். மரங்களை அணைத்துக் கொள்வதன் மூலம் கிராமத்தினர் காட்டை காப்பாற்றினர்.

**காட்டை காப்பாற்று, காட்டை வளர், காட்டை பயன்படுத்து.**

**விடுப்பட்ட இடங்களை சரியான வார்த்தைகளினால் நிரப்பு.**

1. சால்கணி கிராமத்தைச் சுற்றிலும் ______________ உள்ளது.
2. பட்டிணத்தினர் காட்டிலுள்ள மரங்களை ______________ வந்தனர்.
3. கிராம மக்கள் மரங்களை ______________
4. கிராம மக்கள் மரங்களை அணைத்துக் கொள்வதன் மூலம் ______________ காப்பாற்றினர் .
5. காட்டை ______________, ______________ வளர்க்க.

©KTBS Not to be republished

நீ நல்ல சிறுவன் / சிறுமிகளாக வேண்டுமா? எப்படி? விளையாடி அறிக.




பகடையையும் காய்களையும் வைத்து விளையாடு. பகடையை உருட்டி பெறும் எண்ணிற்கேற்ப சதுரங்களை எண்ணி உன் காயை நகர்த்து. ஏணியுள்ள சதுரத்தில் இருக்கும் கட்டத்தில் உன் காய் வரும்பொழுது அங்கு என்ன எழுதப்பட்டுள்து என்பதை படித்து மேலே ஏறு. கயிற்றின் மேல் உச்சியிலுள்ள கட்டத்தில் உன் காய் வரும்பொழுது கீழே இறங்கு. ஏன் என்று படித்து அறி. படித்த அம்சங்களைப் பின்பற்றினால் நீ நல்ல சிறுவன் / சிறுமி ஆவாய். ஆட்டம் ஆடு. நல்லதையே செய்.

©KTBS Not to be republished

## பாடம் - 18

# இவர்களும் நம்மைப் போன்றவர்களே

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- மாற்றுத் திறனாளிகளுக்கு மனமிறங்கி உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வீர்கள்.







இங்கு மூன்று சூழ்நிலைகள் கொடுக்கபட்டுள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீ இருந்தால் என்ன செய்வாய்?

___

___

___

ஆஷாவும் லதாவும் தோழிகள். மூன்றாம் வகுப்பில் படிக்கிறார்கள். லதாவிற்கு கண் தெரியாது. பிரெயில் லிபியுள்ள புத்தகத்தை படிக்கிறாள் மற்றும் பிரெயில் எழுத்துக்களில் எழுதுகிறாள். நன்றாக பாட்டு பாடுகிறாள். இவளுடைய வேலைகளில் ஆஷாவும் வகுப்பிலுள்ள மற்றவர்களும் உதவுகிறார்கள். இவள் சந்தோஷமாக பள்ளிக்குச் செல்கிறாள்.

- நீ லதாவின் தோழன் / தோழியாக இருந்தால் எந்தெந்த வேலைகளில் அவளுக்கு உதவுவாய்?

___ ___

___ ___

©KTBS Not to be republished

**படித்து அறிக :**



***பிரெயில் :*** மூன்று வயதான சிறுவன் ஒருவன் தன் தந்தையின் கூர்மையான கத்தியை வைத்து விளையாடிக்கொண்டிருந்த பொழுது அதன் கூர்மையான நுனி அவனுடைய கண்ணைக் குத்தியது. இதனால் அவன் தன் கண்பார்வையை இழந்தான். படிக்க வேண்டும் என்று விரும்பிய இச்சிறுவனுக்கு படிக்க முடியவில்லை. இவன் வளர வளர படிப்பைப் பற்றியே சிந்தித்தான். எழுதவும் படிக்கவும் வெவ்வேறு வழிகளைக் சிந்தித்தான். இறுதியில் எழுத்துக்களை தொட்டு உணர்வதன் மூலம் படிக்க மற்றும் எழுத இயலும் என்பதை கண்டுபிடித்தான். இதை மேம்படுத்தி, பார்வை கோளாறு உள்ளவர்கள் படிக்க, அனுகூலம் செய்துக் கொடுத்தான். இவர்தான் **லூயிஸ் பிரெயில்** ஆவார். இவர் உபயோகித்த எழுத்துக்களே **பிரெயில் லிபியாகும்.**

ஒரு திண்மமான காகிதத்தின் மீது கூர்மையான நுனியுள்ள ஒரு பொருளைக் கொண்டு குத்துவதன் மூலம் புள்ளிகளை வைக்கிறார்கள். பிறகு இதை திருப்பினால் புள்ளிகள் உப்பியிருக்கும். இதுவே பிரெயில். இதை தொட்டு உணர்ந்து புள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் அடுக்கப்பட்டுள்ள முறையின் மூலம் கண்பார்வை இல்லாமலேயே எழுத்துக்களை அடையாளம் காணலாம்.

இதோ இங்கு பிரெயிலில் ***அ*** மற்றும் ***ஆ***.




ஆறு புள்ளிகளில் 'அ' மற்றும் 'ஆ' குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஆ' வில் 6 புள்ளிகளில் ஒன்று அதிகமாக உப்பியுள்ளது. 'ஆ' வில் மூன்று புள்ளிகள் உப்பியுள்ளது. இவ்விதமாக 6 புள்ளிகளில் எழுத்துக்களை அறிந்துகொள்கிறார்கள்.

©KTBS Not to be republished

கீதா ஒரு அறிவுள்ள சிறுமி. பள்ளியில் அவள் எல்லோரிடமும் கூடி விளையாடுகிறாள். அவளுக்கு காது கேட்காது, பேசவும் இயலாது. இவள் செய்யும் சைகைகளை இவளுடைய நண்பர்கள் அறிவர்.

உனக்கு என்ன வேண்டும் என்பதை உன் நண்பர்களுக்கு சைகை மூலம் காண்பிக்க முயற்சி செய்.

இச்சைகைகள் எதைக் குறிப்பிடுகின்றன என்பதை ஊகித்து எழுது.

















©KTBS Not to be republished

 

______________　　______________

**செயல்பாடு :** சில சமயங்களில் நாம் பேசாமலேயே சைகை மூலம் விவரத்தை கூறுகிறோம். அவற்றில் சிலவற்றை எழுது.

உ.ம் : ஆசிரியர் பாடம் நடத்தும்போது உன் நண்பர்கள் பேசினால் பேசாமல் இருக்கச் சொல்வதற்கான சைகை வாயின் மீது விரலை வைத்தல்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

- கீழ்காண்பவைகளைப் படித்து சைகை மூலம் காட்டு.

| | | |
|---|---|---|
| நீர் வேண்டும் | உணவு வேண்டும் | தூக்கம் வருகிறது |
| மணி அடி | அப்பா வருவார் | கை வலிக்கிறது |
| பந்தாட்டம் ஆடு | கயிறிழுத்து ஆடு | நான் நடனமாடுவேன் |

©KTBS Not to be republished

இரவிக்கு காலில் அடிப்பட்டதால் நடப்பதற்குக் கஷ்டப்படுகிறான். அவன் இப்பொழுதுதான் பள்ளிக்கு வந்திருக்கிறான். இரவி உன் பள்ளியில் சேர்ந்தால் நீ அவனுக்கு எப்படி உதவுவாய்?

உன் சுற்றுப்புறத்தை கவனி நம்மைப் போலவே இருக்கும் பலருக்கு உடல்ரீதியான பிரச்சனைகள் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இவர்களுக்கு விவேஷ சேவைகள் அவசியம். அவர்களுடைய வேலைகளைச் செய்ய அவர்களுக்கு உதவி தேவை அதற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு முக்கியமாக வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் பலர் தமது உழைப்பாலும் ஆர்வத்தாலும் பல சாதனைகள் புரிந்து புகழ்பெற்றுள்ளனர். இப்படிப்பட்டவர்களைப் பற்றி பெரியோர்களிடமிருந்து கேட்டு அறி. அவர்களைப் பற்றி 4 வரிகள் கூறு.

***படித்து அறிக :***

### டா. புட்டராஜ் கவாய்

கலை, இலக்கியம், சங்கீதம் மற்றும் நாடகங்கள் மூலம் புகழ்பெற்றவர். புட்டராஜ் கவாய்.



சிறுவயதிலேயே தமது இரு கண்களையும் இழந்த கவாய், பஞ்சாக்ஷரி கவாயின் சீடராக இருந்தார். பிரெயில் லிபியைப் படித்து இவர் 64-க்கும் அதிகமான படைப்புகளை இயற்றியுள்ளார். சிறந்த பாடகரான இவர் எல்லா இசைக் கருவிகளையும் வாசித்துள்ளார். இவரிடம் 15 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயின்றுள்ளனர். 2010ல் இவர் மறைந்தார். இவர் சமுதாயத்திற்கு அளித்த கொடை ஏராளம்.

©KTBS Not to be republished

# பாடம் - 19

# பண்டிகைகளும் திருவிழாக்களும்

**இவ்வலகைக் கற்ற பின் நீங்கள்,**

- சமுதாயத்தில் நடைபெறும் திருவிழாக்கள், பண்டிகைகள் மற்றும் மற்ற விழாக்களில் பங்கு கொள்வீர்கள். அங்கு காணப்படும் பரஸ்பர ஒற்றுமையைக் குறிப்பிடுவீர்கள்.



நான் இரமேஷ். எங்களுக்கு தீபாவளி பெரிய பண்டிகை. இப்பண்டிகையை மூன்று நாட்கள் கொண்டாடுகிறோம். முதல் நாள் நரக சதுர்தஷி, இரண்டாம் நாள் கோபூஜை மற்றும் லக்ஷ்மி பூஜை, மூன்றாம் நாள் பலிபாட்யமி. மூன்று நாட்களும் வீட்டில் விளக்கேற்றி இனிப்பு சாப்பிட்டு பட்டாசுகள் வெடிப்போம். இப்பண்டிகை வந்தால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி.





நான் நகீனா. எங்களுக்கு ரம்சான் முக்கியமான பண்டிகை. ரம்சான் மாதத்தில் பகலில் உபவாசம் இருந்து கடைசி நாளன்று பண்டிகையைக் கொண்டாடுகிறோம். அன்று எங்கள் வீட்டில் பல வகையான தின்பண்டங்களையும் இனிப்பு வகைகளையும் சமைப்பர். நண்பர்களுக்கும் அண்டை வீட்டாருக்கும் வாழ்த்து கூறுவர்.



©KTBS Not to be republished



